Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# Life of Women in *Purananooru*

**N. Padmasree**, Reg.No.: 21113154022030, Research Scholar, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil-02, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-1153-1320
**Dr. P. M. Jayakala**, Associate Professor of Tamil, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil-02, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
**DOI: 10.5281/zenodo.14752230**

## Abstract

*Sangam songs are the treasure of Tamils. Sangam literature mirrors life and expresses the sentiments of the Tamil people. They have given inner primacy of feelings and other feelings as external and they have made a distinction of internal and external life. One can also see that women are highlighted in the Sangam Songs. Sangam women did not distinguish between love life and domestic life but also academic prowess and the gift of the women. The purpose of this article is to explore the way that how "Purananooru" speaks about the heroic spirit of women who sent their sons to war for the sake of the country after losing their husbands in the war. The patriotism and courage they share show how they support their husbands. Therefore, the Sangam period is considered the golden age of Tamil literature. It was a time when Tamil poets abounded in their knowledge. During that time, female poets were seen as literary figures on par with male poets. Many "Purananooru" songs show us that women excelled not only in domestic life but also in education. Hence, this article tells the life of women as seen in "Purananooru".*

**Keywords:** Women, Bravery, Hospitality, Family Life, Philanthrophy.

## References

[1] Aruna. *Thirukuralmoolamumuraium*. Aruna Publications, Chennai, 2018.
[2] Kokila. "Purananuru Padalgal Pengalin Veeram." *Sarvadhesa Tamil Aaivethal*, Volume-4, 2022. DOI : 10.34256/irjt22345
[3] Tamizhannal. *Tholkaapiyam Moolamum Karuthuraium*. Meenakshi Puthaga Nilayam, Mayooravalagam, Madurai, 2017.
[4] Dhanalakshmi. "Sangakalathil Magalir Thozhilgal." *Shanlax International Journal*, Issue 1 July 2018.
[5] Bala Subramaniam. *Purananuru Mullamum Uraium*. NCBH, 2011.
[6] Bala Subramaniam. "Nathenaim Ullamum Uraium." NCBH, 2004.
[7] Puliyurkesigan. *Silappadikaram Mullamum Uraium*. Saran Books, Chennai, 2012.
[8] Jay Kumari. "Shanga Illakeyakalil Pengalin Allumai." *Puthiya Avayam*, Vol-07, Issue-02, June 2023.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

262

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# புறநானூறு உணர்த்தும் பெண்களின் வாழ்வியல்

**நா. பத்மஸ்ரீ,** பதிவுஎண்: 21113154022030, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி- 12, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-1153-1320**
**முனைவர் பா. ம. ஜெயகலா**, இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி- 12. தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
**DOI: 10.5281/zenodo.14752230**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர்களின் இலக்கிய சொத்து சங்க பாடல்கள். தமிழனின் உணர்வினை வெளிப்படுத்தும் காலக் கண்ணாடியாகிய சங்க இலக்கியத்தில் உள்ள உணர்வுகளுக்கு அக முதன்மையும் பிற உணர்வுகளுக்கு புறம் என இரண்டாம் இடமும் கொடுத்து அகம் புறம் என்ற பாகுபாட்டை வகுத்துள்ளனர். உணர்வுகள் என்றாலே பெண்களை முன்னிலைப்படுத்தி உள்ளதையும் காணலாம். சங்ககால பெண்கள் காதல் வாழ்க்கை, இல்லற வாழ்க்கை மட்டுமல்லாமல் கல்வி வீரத்திலும் கொடையிலும் சிறப்புற்றவர்களாக இருந்தனர்.தன் கணவனை போரில் இழந்த பின்னும் நாட்டிற்காக தன் மகனை போருக்கு அனுப்பிய பெண்களின் வீர உணர்வையும் இரவலர்க்கு பகிர்ந்து அளிக்கும் கொடை தன்மையும் கணவனுக்கு துணையாக இருக்கும் இல்லற வாழ்க்கை பற்றியும் புறநானூற்றின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** மகளிர், வீரம், விருந்தோம்பல், இல்லறம், கொடை.

**முன்னுரை**

செம்மொழியாம் தமிழ் மொழி தரணிய உயர்வடைய செய்த மொழி இலக்கியங்களில் முதன்மையாக சொல்லப்படுகின்ற சங்க இலக்கியம் தான் தலைமை இடம் பெறுகிறது.'சங்க காலத்தில் மகளிருக்கு உயர்ந்த மதிப்பு இருந்தது (தனலட்சுமி, பக். 1) என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. புற வாழ்க்கையிலும் அக வாழ்க்கையிலும் மகளிர் தகுந்த நிலையில் இருந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இத்தகைய தன்மையுடைய இலக்கியங்களில் புறநானூறு சிறப்பு பெறுகிறது. புறநானூற்று பெண்களின் வீரம், இல்லற வாழ்க்கை, விருந்தோம்பல் பண்பு, கொடை திறம் போன்றவைகளை இக் கட்டுரையின் வழி அறியலாம்.

**சங்ககாலப் பெண்கள்**

பழந்தமிழ் பண்பாட்டின் நிலைகளனாய் அமைந்தவே சங்ககால மகளிரின் பண்புகள் ஆகும். "பெண்கள் நடமாடும் பிரம்மாக்கள் தாயுள்ளம், கருணை, அன்பு மென்மை

தன்மையோடு இருப்பவர்கள்" (ஜெய குமாரி, ப. 493). "பெண்கள் மேன்மை, அறிவு போன்ற இயற்கை குணங்களைக் கொண்டவர்கள்" என்று உ . வே சாமிநாத ஐயர் குறிப்பிடுகிறார். சங்க காலத்தில் பெண்கள் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றபட்டனர். பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராகச் சிறந்து விளங்கினர். மேலும் பெண்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை பண்புகளான நான்கு வகை குணங்களிலும் சிறப்பு பெற்று விளங்கினர் இதையே, தொல்காப்பியர்,

**அச்சமும் நாணும் மடனும் முந் துறத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ன (தொல்., 1045)**

என்ற நூற்பா வழி உணர்த்துகிறார். இந்த தொல்காப்பிய கூற்றுக்கிணங்க சங்க காலப் பெண்கள் உயர்ந்த பண்புகள் பல பெற்று விளங்கியதை புறநானூற்று இலக்கியமும் தெளிவுபடுத்துகிறது.

**பெண்பாற் புலவர்கள்**

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனச் சித்திகரிக்கப்படும் சங்க காலம் தமிழ் புலவர்கள் நிறைந்து வழிந்த காலம் அக்காலத்தில் ஆண்பாற் புலவர்களுக்கு இணையாக பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக காணப்பட்டனர். பெண்கள் இல்லறத்தில் மட்டுமின்றி கல்வியிலும் சிறப்பு பெற்றிருந்தனர் என்பதை, புறநானூற்று பாடல்கள் பல நமக்கு உணர்த்துகின்றன. ஔவையார், காக்கை பாடினியார், காவற்பெண்டு, நச்செள்ளையார், தாயங்கண்ணியார், பாரி மகளிர் பொன்முடியார், வெள்ளை மாளர், போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் இப்புறநானூற்று பாடல்களை பாடி உள்ளனர். இவர்கள் சுதந்திர மனப்பான்மை உடையவர்களாகவும், துணிந்த நெஞ்சம் படைத்தவர்களாகவும், சிறந்த தூதுவர்களாகவும் தங்களை வெளிப்படுத்தியது அவர்களின் பாடல் வழி அறிய முடிகிறது.

**புறநானூற்று பெண்களின் வீரம்**

புறநானூற்று மகளிர் வீரம் மற்றும் நாட்டுப்பற்று உடையவர்களாக காணப்பட்டனர். பகைவர் இடத்தில் தங்கள் நாட்டை காப்பதற்கு தங்கள் கணவன் மற்றும் பிள்ளைகளை போருக்கு அனுப்பி வெற்றி வாகைச் சூட செய்தனர். போர்க்களத்தில் விழுப்புண் ஏற்படினும் அது புற முதுகில் இடம்பெறுதல் கூடாது என்ற வேட்கை உணர்வு உடையவர்களாக காணப்பட்டனர். ஒரு வீரனுடைய தாய் தன்மகன் போர்க்களத்தில் இறந்தான் என்று செய்தி அறிந்தவுடன் மகனை காண போர்க்களம் செல்கிறார். அங்கு தம் பகைவர்களை எதிர்த்துப் போர் புரிந்து இறுதியில் உடல் வெட்டுண்டு கிடந்த தன் மகனின் வீரத்தைக் கண்ட பெருமிதத்தில் அவளுடைய வற்றிய மார்புகள் மீண்டும் பாலூறி சுரந்தன இதை,

**கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்**
**வெந்து வாய் மடித்து வேல் தலைப் பெயரி**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**தோடு உகைத்து எழுதரூஉ துரந்து ஏறி ஞாப்பின்**
**வரு படை போழ்ந்து வாய்ப் பட விலக்கி**
**கிடைப் படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி**
**வாடு முலை ஊறிச் சுரந்தன**
**ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே. (புறம்., 295)**

என்ற பாடல் வலியுறுத்துகிறது.ஒரு தாயானவள் தன்மகன் இறந்தாலும் கூட வீரனாகவும் சான்றோனாகவும் இருக்க வேண்டும் இது அவனை பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியை விட பெரியது" (வீ. கோகிலா. ப. 2) தன் மகன் போரில் இறந்ததை எண்ணி வருந்தாமல் நாட்டை காக்க உயிரை கொடுத்ததற்காக பெருமிதம் கொள்ளும் வீர மறக்குடி பெண்களாக நம் புறநானூற்று பெண்கள் திகழ்ந்தனர், என்பதை மேற்கூறிய பாடல் வழி அறிய முடிகிறது.

**புறநானூற்று மகளிரின் இல்வாழ்க்கை**

சங்க கால பெண்கள் மனையற மாண்புகளில் சிறந்து விளங்கினர். மகளிரின் மனையற மாண்புகளாக இல்வாழ்க்கை, விருந்தோம்பல், மக்கள் பேறு, ஈகை, பொறுமை, கணவனை பேணுதல் போன்ற நற்பண்புகளை பெற்றிருந்தனர் என்பதை புறநானூற்று வழி அறிய முடிகிறது. இல்வாழ்க்கை என்பது கணவன் மனைவி இருவரும் மேற்கொள்ளும் அறம், பொருள் இன்பங்களால் சிறப்புறுவது. இதையே வள்ளுவரும்,

**அறம் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று (குறள்., 47)**

என்ற குறள்வழி அறியலாம். அதாவது பிறருடைய பழிச்சொல் இல்லாது அறச் செயல் செய்து வாழ்வதே சிறந்த இல்வாழ்க்கை என கூறுகிறார்.இதையே புறநானூறும் வலியுறுத்துகிறது.

**நீரொடு நிறைந்த ஈர் இதழ் மழைக்கண் என்**
**மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ**
**நிற் படர்ந்திசினே-நல் போர்க் குமண!-**
**என் நிலை அறிந்நனை ஆயின் (புறம்., 164)**

என்னும் பாடல் வரிகள் வறுமையால் வாடும் தன் மனைவியின் துன்பத்தை கண்ட பெருந்தலைச் சாத்தனார் துன்பத்தை நீக்கும் பொருட்டு குமணனிடம் வந்து தன்னிலையை கூறி பொருள் பெற்று சென்றதை எடுத்துக்காட்டுகிறது. ஆக ஆண் பெண் இருவரும் கருத்தொருமித்த இல்லற வாழ்வை மேற்கொண்டு இருந்தனர் என்பதை இப்பாடல் வழி அறிய முடிகிறது.

இல்லற வாழ்விற்கு வலுவூட்டுவது 'விருந்தோம்பல்' ஆகும். நம் புறநானூற்று மகளிர் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர்.நம்மை நாடிவரும் விருந்தினரை இன் முகத்தோடு வரவேற்று உண்ண உணவும் உடுக்க உடையும் கொடுத்து மிக்க அன்போடு அவர்களை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உபசரித்தனர். பண்டைய தமிழர்கள் தாம்வறுமை நிலையில் வாழ்ந்த போதிலும் நம்மை நாடி வருகின்ற வறியவர்களுக்கு விருந்தளித்து மகிழ்ந்தனர். மேலும் நாள்தோறும் தங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வரவேண்டும் என்று பெண்கள்'நடுகல்' வழிபாடு செய்தனர் என்பதை, கீழ்காணும் புறநானூற்று பாடல் வரிகள் மூலம் உணர முடிகிறது.

களிறுபொரக் கலங்கு, கழல் முள் வேலி

**அரிதுஉண் கூவல், அம்குடிச் சீறூர்**

**ஒலிமென் கூந்தல் ஒள்நுதல் அரிவை**

**நடுக்கல் கைதொழுது பரவும்,**

**ஒடியாது;**

**விருந்து எதிர் பெருகதில் யானே என்னையும் (புறம்., 306)**

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. மேலும் இளங்கோவடிகளும் தம் காப்பியத்தில் விருந்தின் மேன்மையை வலியுறுத்தி உள்ளார்.

**மரப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்**

**விருந்து புறந்தரூஉம் பொருந்தன் வாழ்க்கையும் (சிலம்பு., 85, 86)**

என்ற சிலப்பதிகாரப் பாடல் கண்ணகி தன் பொழுநன் கோவலன் தன்னோடு இல்லாததால் அறவோர்க்கு அளித்தல் ,அந்தணர்க்கு ஓம்பல், துறவிகளை உபசரித்தல் போன்ற இல்லற பண்புகளை செய்ய முடியாமல் போனதை எண்ணி வருந்துகிறாள்.மேலும்,

**இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள்., 81)**

என்று வள்ளுவரும் பொருள்களை உருவாக்கி பாதுகாப்பது ஏனெனில் தன்னை நாடிவரும் விருந்தினருக்கு கொடுத்து உதவி செய்வதற்கே என்று விருந்தின் மேன்மை எடுத்துக் கூறுகிறார்.

சங்ககால பெண்கள் தம் கணவன் மற்றும் பிள்ளைகளிடம் பேரன்பு மிக்கவர்களாக வாழ்ந்தனர் என்பதை புறநானூற்று பாடல்கள் வலியுறுத்துகின்றன. கணவனுக்கு துன்பம் ஏற்படும் போது உறுதுணையாகவும், கணவன் தன் அருகில் இல்லாத நேரத்தில் தங்களை ஒப்பனை செய்து கொள்ளாமலும் வாழ்ந்தனர். மேலும், போரில் புண்பட்ட தன் கணவனை பேய் நெருங்காதிருக்க வேப்பிலைகளை தன் மனையில் செரிகியும், கடுகை வீட்டின் முன் சிதறியும், ஆம்பல் பண்ணைப் பாடியும், மணியோசை எழுப்பியும், ஈடுபடுவது நறுமணப் புகை பரப்பியும் பாதுகாத்து வந்தனர் என்பதை பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

**தீங் கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ,**

**வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க ,**

**கை பயப் பெயர்த்து மை இழுது இழுகி ,**

**ஐயவி சிதறி,ஆம்பல் ஊதி**

**இசை மணி ஏறிந்து ,காஞ்சி பாடி**
**நெடு நகர் வரைப்பில் கடி நறை புகைஇ ,**
**காக்கம் (புறம்., 281)**

என்னும் பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. மேலும், இல்வாழ்க்கையில் சிறந்த பேறாக கருதப்படுவது மக்கள் பேறு ஆகும். இதையே வள்ளுவர்,

**மங்கல மென்ப மனைமாட்சி யதன்**
**நன்கலன் நன்மக்கட் பேறு (குறள்., 60)**

என்ற குறள் எடுத்துரைக்கிறது. மேலும், மக்களால் உண்டாகும் இன்பமே இன்பங்களில் எல்லாம் சிறந்தது. அறிவு கொடை நற்குணம் படைத்த மக்களை பெற்ற தாய், தந்தையரை உலகம் போற்றி புகழும் என்றும் புறநானூறு விளக்குகிறது.

**படைப்புல பல படைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப் படக்**
**குறுகுறு நடந்து , சிறு கை நீட்டி,**
**இட்டும் தொட்டும் ,கவ்வியும் ,துழந்தும்,**
**நெய்யுடை அடிசில் மெய் பட விதிர்த்தும் (புறம்., 188)**

என்ற பாடல் வழி அறியலாம்.

**புறநானூற்று பெண்களின் கொடைத்திறம்**

எந்தவித கைமாறும் கருதாமல் வறியவர்க்கு பிறருக்கும் நாம் கொள் என கொடுத்தலே'கொடை' ஆகும். உலகத்தார் போற்றும் அறங்களில் எல்லாம் காலத்தால் அழியாத சிறப்பு பெற்றது ஈகையே, புறநானூற்று பெண்கள் கொடையுள்ளம் கொண்டவர்களாக வாழ்ந்தனர் என்பதை, புறநானூற்று பாடல்கள் பல அறிவுறுத்துகின்றன. தம்மைத் தேடி வரும் இரவலர் விருந்தினர் மற்றும் உறவினர்களுக்கு தம்மால் இயன்ற அளவு பொருட்களை கொடுத்து மகிழ்ந்தனர். தன் கணவன் தன்னை விட்டு போருக்காகவோ அல்லது வேறு நிமித்தமாகவோ பிரிந்து சென்றாலும் புறநானூற்றும் மகளிர் தம் இல்லம் தேடி வரும் நிலவ இரவலர்க்கு இல்லை என்று கூறாது பொருட்களை வாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவர்களாக விளங்கினர் என்பதை, பின்வரும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

**பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப,**
**விண் தோய் சிமைய விறல் வரைக் கவாஅன்,**
**கிழவன் சேட் புலம் படரின், இழை அணிந்து,**
**புன் தலை மடப் பிடி பரிசிலாக,**
**பெண்டிரும் தம் பதம் கொடுக்கும் வண் புகழ்க் (புறம்., 151)**

இந்தப் பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. மேலும்,

**பிறர்க்கு என முயலும் பேரருள் நெஞ்சமொடு (நற்., 186)**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்னும் பாடல் கிடைத்த பொருளை சேர்த்து வைக்காமல் வறுமையில் வாடுவோருக்கு கொடுத்து எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று நினைப்பதே நல்ல உள்ளம் ஆகும்.

**முடிவுரை**

சங்ககாலத்தில் ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லாமல் மக்கள் வாழ்ந்தனர். பெண்கள் ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் சிறப்பு பெற்று விளங்கினர். அவற்றுள் புறநானூற்றில் பெண்கள் போற்றுதற்குரிய பல நற்பண்புகளை பெற்றிருந்தனர். இல்லறம், விருந்தோம்பல், கல்வி, வீரம், கொடை போன்ற நற்செயல்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தினர். கணவன் மற்றும் பிள்ளைகளை பேணுதலிலும் அவர் பால் அன்பு காட்டுதலிலும் குறைவில்லாமல் வாழ்ந்தனர்.ஈகையில் தன்னலம் கருதாது வாழ்ந்தனர் என்பதை புறநானூற்று வழி அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

[1] அருணா. *திருக்குறள் மூலமும் உரையும்.* அருணா பப்ளிகேஷன்ஸ். சென்னை மூன்றாம் பதிப்பு நவம்பர் 2018.

[2] கோகிலா. "புறநானூற்று பாடல்களில் பெண்களின் வீரம்." *சர்வதேச தமிழ் ஆய்விதழ்,* தொகுதி 4, 2022.

[3] தமிழண்ணல். *தொல்காப்பியமும் மூலமும் கருத்துரையும்.* மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், மதுரை, ஐந்தாம் பதிப்பு, ஆகஸ்ட் 2017.

[4] தனலட்சுமி. "சங்ககாலத்தில் மகளிர் தொழில்கள்." *சான்லாக் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்,* தொகுதி 1, ISSN 24 54 39 93, ஜூலை 2018.

[5] பாலசுப்பிரமணியன். *புறநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, அக்டோபர் 2011.

[6] பாலசுப்பிரமணியன். *நற்றிணை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

[7] புலியூர் கேசிகன். *சிலப்பதிகாரம் மூலம் உரையும்.* சரண் புக்ஸ். சென்னை. 2012.

[8] ஜெயகுமாரி. "சங்க இலக்கியங்களில் பெண்களின் ஆளுமை." *புதிய அவையம்,* தொகுதி 2, ஜூன் 2023.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.